29th January 1966]

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, எனக்குத் தெரிந்த ஒரு பையன் தனக்கு வந்த ஸ்காலர்ஷிப் செக்கை எடுத்துக் கொண்டு பாங்குக்குச் சென்று மாற்ற முயற்சித்தபோது, 'அந்த இனத்தில் பணம் இல்லை, இரண்டு நாட்கள் கழித்துக் கொண்டு வா' என்று அனுப்பி விட்டார்கள் . . .

கனம் சபாநாயகர் : கனம் அமைச்சர் அவர்கள்தான் தகவல் இல்லை என்று சொல்லுகிறார்களே.

திரு. து. ப. அழகமுத்து : பணம் இல்லாமல் செக் கொடுக்க வேண்டிய அவசியம் என்ன ?

MR. SPEAKER : The Minister has replied that he has no such information. How can the hon. Member's question be answered now? He will have to write to the Minister saying that on such and such dates cheques presented by such and such students were rejected.

திரு. து. ப. அழகமுத்து : எழுதி அனுப்பினால் அதைப்பற்றிப் பரிசீலனை செய்வார்களா ?

MR. SPEAKER : If the hon. Member writes a letter to the Minister giving specific cases, then the Minister will take action and send a reply. If the hon. Member wants any further elucidation on the reply, then he can give notice of a separate question.

Accommodation allowance to the Assistant Public Prosecutors

* 11 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to grant accommodation allowances to the Assistant Public Prosecutors of Grades I and II in the State ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI N. NALLASENAPATHI SARKARAI MANRADIAR : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

திரு. செ. மாதவன் : கனம் தலைவர் அவர்களே, இவர்களும் அரசாங்கத்தில் பணிபுரிகிறவர்கள். அரசாங்க அதிகாரிகளுக்குக் கொடுப்பது போல் இவர்களுக்கும் இப்படிப்பட்ட சலுகைகளைக் கொடுப்பது பற்றி அரசாங்கம் மறுபரிசீலனை செய்யுமா?

கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் : நான் இப்பொழுது தான் பதில் சொன்னேன். ஏதோ சில தீர்மானங்கள் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அவற்றை உயர் நீதிமன்றத்தின் யோசனைக்கு அனுப்பியிருக்கிறோம். உயர் நீதி மன்றத்தின் அபிப்பிராயம் கிடைத்த பிறகு என்ன செய்யலாம் என்பது பற்றி பரிசீலனை செய்கிறோம்.